# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2022

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்:

*நேரம்: 3.00 மணி* **தமிழ்** *மதிப்பெண்கள்: 90*

பிரிவு - 1

**I. பலவுள் தெரிக:**

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக:** **14×1=14**

1. பாயிரம் இல்லது ............ அன்றே.
   அ) காவியம் ஆ) பனுவல் இ) பாடல் ஈ) கவிதை
2. மொழி முதல் எழுத்துகளின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.
   அ) அன்னம், கிண்ணம் ஆ) டமாரம், இங்ஙனம்
   இ) ரூபாய், லட்சாதிபதி ஈ) றெக்கை, அங்ஙனம்
3. "வான் பொய்த்தது" - என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப்பொருள்
   அ) வானம் இடிந்தது ஆ) மழை பெய்யவில்லை
   இ) மின்னல் வெட்டியது ஈ) வானம் என்பது பொய்யானது
4. 'மண்ணுக்கு வளம் சேர்ப்பன' -
   அ) மண்புழு ஆ) ஊடுபயிர் இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்
5. அ) குறிஞ்சி - 1. ஓரம் போகியார்
   ஆ) முல்லை - 2. கபிலர்
   இ) மருதம் - 3. அம்மூவனார்
   ஈ) நெய்தல் - 4. பேயனார்
   அ) 2, 4, 1, 3 ஆ) 1, 2, 3, 4 இ) 3, 4, 1, 2 ஈ) 2, 3, 1, 4
6. பகுபத உறுப்புகளுள் இடம் பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?
   அ) பகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகுதி, விகாரம் ஆ) பகுதி, இடைநிலை, சாரியை இ) பகுதி, சந்தி, விகாரம் ஈ) பகுதி, விகுதி
7. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?
   அ) பாரதிதாசன் ஆ) அண்ணாமலையார் இ) முருகன் ஈ) பாரதியார்
8. தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை
   அ) 9 ஆ) 3 இ) 27 ஈ) 13
9. துன்பப்படுபவர் ............
   அ) தீக்காயம் பட்டவர் ஆ) தீயினால் சுட்டவர்
   இ) பொருளைக் காக்காதார் ஈ) நாவைக் காக்காதவர்
10. நேரொன்றாசிரியத் தளை எனப்படுவது
    அ) காய் முன் நேர் ஆ) காய் முன் நிரை இ) கனி முன் நிரை ஈ) மா முன் நேர்
11. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாத குறிப்பு எது?
    அ) மொழிபெயர்ப்பாளர் ஆ) இந்தியாவின் பெப்பிசு
    இ) தலைமைத் துவிபாஷி ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை
12. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ........... நினை.
    அ) முகக்குறிப்பை அறிந்தவரை ஆ) எண்ணியதை எண்ணியவரை
    இ) மறதியால் கெட்டவர்களை ஈ) சொல்லேர் உழவரை

www.Padasalai.Net

13. Book Review - என்பதன் தமிழ்ச் சொல்லைத் தேர்ந்தெடுக்கவும்.
அ) மதிப்புக் கல்வி ஆ) கல்விக்குழு இ) புத்தக மதிப்புரை ஈ) கலை விமர்சகர்
14. ஆறாம் திணையின் நிலம் ..........
அ) மலையும் மலை சார்ந்த நிலமும் ஆ) காடும் காடு சார்ந்த நிலமும்
இ) பனியும் பனி சார்ந்த நிலமும் ஈ) வயலும் வயல் சார்ந்த நிலமும்

பிரிவு - 2

**II. குறுவினா**

**அ) எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3×2=6**

15. இனம், மொழி குறித்த இரசூல் கம்சதோவ் பார்வையைக் குறிப்பிடுக.
16. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?
17. இங்கே, ஐம்பதாண்டு வேம்பு
கோடையில் கொட்டும் பூக்களை
எண்ணச் சொல்கிறார்கள் - எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?
18. படைக்குப் பாதுகாப்பாக இருப்பவை எவை?

**ஆ) எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2×2=4**

19. தமிழ்நாட்டின் மாநில மரம் - சிறுகுறிப்பு வரைக.
20. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?
21. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.

பிரிவு - 3

**III. எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7×2=14**

22. *ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக:*
அ) அலர்ந்து ஆ) இரங்கி
23. *ஏதேனும் ஒன்றனுக்கு இலக்கணக் குறிப்பு தருக:*
அ) மாநகர் ஆ) வெண்சுவை
24. *சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க:*
தங்கை அல்லது வைகை
25. பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?
26. *தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி இரண்டு சொற்றொடர்களாக்குக.*
ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்
27. உயிரீறு, மெய்யீறு - விளக்குக.
28. *மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக:*
உலை, உளை, உழை
29. *வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக:*
குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.
30. *புதிர்களுக்கான விடைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுக.*
i) அறிவின் பெயரும் அதுதான், அம்புலியின் பெயரும் அதுவேதான் ...........
(இதழ், ஆழி, மதி)
ii) அடிக்கவும் செய்யலாம் கோடைக்குக் கூழாகவும் குடிக்கலாம். ............
(கம்பு, மை, வளை)

www.Padasalai.Net

பிரிவு - 4

**IV. ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்கவும்:** **2×4=8**

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:

31. நூல் ஒன்றின் முகவுரையில் இடம்பெற வேண்டுவனவாக நன்னூல் எவற்றைக் குறிப்பிடுகிறது?

32. "ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி
அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்" - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.

34. மேகத்திடம் கூறுவதுபோலத் தோழி தலைவனுக்கு உணர்த்திய இறைச்சிப் பொருள் யாது?

**V. எவையேனும் இரண்டனுக்கு விடை தருக:** **2×4=8**

35. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? - நும் கருத்தை எழுதுக.

36. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' - என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

37. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.

38. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதைப் பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.

**VI. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக:** **3×4=12**

39. இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக. **(அல்லது)**

வேற்றுமை அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. *பின்வரும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து மையக்கருத்தினை எழுதி, ஏற்புடைய நயங்கள் மூன்றினையும் எழுதுக.*


மீன்கள் கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
  வளர்ந்து வளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
  வாடி வாடிப் போவதேனோ? வெண்ணிலாவே!
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
  பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
  பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே!

- கவிமணி

41. பொதுவியல் திணையை எடுத்துக்காட்டுடன் விளக்குக. **(அல்லது)**

பொருண்மொழிக் காஞ்சித்துறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

42. கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக.




43. *பழமொழியை வாழ்க்கை நிகழ்வுகளோடு தொடர்புபடுத்தி எழுதுக:*
தன் கையே தனக்குதவி

**(அல்லது)**

யானைக்கும் அடிசறுக்கும்.

பிரிவு - 5

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி :** **3×6=18**

44. திருமலை முருகன் பள்ளு கூறும் வடகரை, தென்கரை நாட்டின் இயற்கை வளங்களை கூறுக.

**(அல்லது)**

"அடக்கமுடைமை" ஒருவரை வாழ்வினில் உயர்த்தும்" என்பதை குறள் வழி விளக்குக.

45. நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சு மொழியையும் எழுத்து மொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரி.

**(அல்லது)**

இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன - கூற்றினை மெய்ப்பிக்க.

46. யானை டாக்டர் கதை வாயிலாக இயற்கை, உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றைத் தொகுத்து எழுதுக.

**(அல்லது)**

பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?

பிரிவு - 6

**அடிபிறழாமல் செய்யுள் வடிவில் தருக:** **4+2=6**

47. அ) "ஏடு தொடக்கி வைத்து" - எனத் தொடங்கும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.
ஆ) 'நன்று' - என முடியும் குறள்

★★★★★★

www.Padasalai.Net